# C.S.I TAMIL CHURCH - OMAN

# "பாலைவன மன்னா"



மன்னா – 11 நவம்பர் 2021 பிரதி – 8

# செயலர் மடல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்களாகிய உங்கள் அனைவரையும் அன்போடு வாழ்த்துகின்றேன். கர்த்தருடைய கிருபையினாலும் ஆசீர்வாதத்தினாலும் கடந்த அக்டோபர் மாதம் முழுவதையும் கடந்து வந்தோம். புதிய மாதத்திற்குள் பிரவேசித்திருக்கிறோம். இந்த மாதம் நமக்கு ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் இரக்கம் செய்வாராக.

**போதகர்:**

நமது சபையில் இரண்டரை ஆண்டுகளாக ஊழியம் செய்த **Rev. Dr. N. Jesin** அவர்கள் கடந்த மாதம் 10-ம் தேதி தாயகம் திரும்பினார்கள். குமரிப் பேராயத்தில் கொற்றிகோடு திருச்சபையில் இந்த மாதம் 1-ம் தேதி முதல் பணி பொறுப்பேற்றிருக்கிறார்கள். அவர்களது ஊழியம் அங்கு சிறப்பானதாக அமைய ஜெபியுங்கள். கடந்த 8-ம் தேதி நடைபெற்ற போதகரின் பிரிவு உபசாரவிழா சிறப்பாக நடைபெற்றது. போதகரை கனப்படுத்திய உங்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய போதகர் நம் சபையில் பொறுப்பேற்கும்வரை நமது சபையின் எல்லா ஆராதனைகளையும் மிகவும் சிறப்பாக நடத்தி தந்த போதகர் **Rev. Sing John Nathaniel** அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது சபையின் புதிய போதகராக **Rev. S. Bovas M.A.,B.D.** அவர்கள் பேராயரால் 01-11-2021 முதல் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு Mrs. Fexcilin Tuniow Monish என்ற மனைவியும், Brion Fenix என்ற மகனும், Briolin Fani என்ற மகளும் உண்டு. போதகரின் ஊழியம் நமது சபையின் வளர்ச்சிக்கு ஏற்றதாய் இருக்க ஆண்டவர் தயை செய்ய ஜெபிப்போம். போதகர் விரைவில் ஓமான் வந்து நம்மோடு இணைந்து ஊழியங்களை தொடர ஜெபியுங்கள்.

**PCO Visa:-**

திருச்சபைக்கு இன்னொரு மைல் கல்லாக கடந்த 17 ஆண்டுகளாக நாம் ஆவலாய் எதிர்பர்த்து கொண்டு இருந்த Religious visa, PCO-வால் நம் திருச்சபைக்கு வழங்கப்பட இருக்கிறது. நம்முடைய புதிய போதகர் **Priest Visa** அந்தஸ்தோடு வர இருக்கிறார்கள் என்பதை மிகவும் பெருமிதத்தோடு

திருச்சபைக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன். போதகர் விசா கிடைக்க கிருபை செய்த நம் தேவாதி தேவனுக்கு என் ஸ்தோத்திரங்களையும் நன்றியும் செலுத்துகிறேன். அடுத்தப்படியாக இந்த விசா கிடைப்பதற்க்கான எல்லா முயற்சியும் செய்த PCO தலைமை போதகர் **Rev. Joshua Bode** மற்றும் PCO Council Chairman **Dr. Hani Naguib,** PCO Secretary **Mrs. Dulari Fernando,** முன்னாள் PCO Council **Chairman Mr. Bomfim Eli Carlos**, முன்னாள் PCO Finance Chairman **Mr. Paul Retna Sekar**, நமது பேராயர், முன்னாள் போதகர்கள், சபை நிறுவனர்கள், கமிட்டி அங்கத்தினர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மற்றும் மேலான ஜெபங்களால் தாங்கி முழு ஆதரவு தந்த திருச்சபையின் ஒவ்வொரு அங்கத்தினர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

நன்றி!

**இவண்,**
**சபை செயலர்**
**சுஜித் கிளாட்சன**

## அருளுரை

## அவர்களை ஆசீர்வதித்தார்

“அவர்களை அணைத்துக்கொண்டு அவர்கள்மேல் கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார்” – மாற்கு 10 : 4



நம்முடைய தொழுகை என்பது ஆலயத்திற்கு வந்து ஆராதனையில் பங்குபெறுவதோடு நின்றுவிடுவதில்லை. நம்முடைய தொழுகை வாழ்க்கையோடு இணைந்து காணப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் நடக்கும் தொழுகை, மற்ற எல்லா நாட்களிலும் நம்முடைய வாழ்க்கையில் பிரதிபலிக்க வேண்டும் என்பது தொழுகையின் கருத்து. அப்படியென்றால் நம்முடைய தொழுகையோடு சம்பந்தப்பட்டதாக நம்முடைய குடும்ப வாழ்வு, நம்முடைய தனிப்பட்ட வாழ்வு, நம்முடைய குழந்தைகள் வாழ்வு எல்லாம் அமைய வேண்டும். அதுதான் இறைவனுடைய விருப்பம்.

நம்முடைய நாட்டிற்கு நம்முடைய வீட்டிற்கு நம்முடைய திருச்சபைக்குக் குழந்தைகள் மிகவும் முக்கியமானவர்கள். குழந்தைப் பருவம் மிக முக்கியமான பருவம். கடவுள் இந்த உலகத்தில் செயலாற்றுகிறார் என்பதைக் குழந்தையின் மூலம் நாம் பார்க்கிறோம். நம்முடைய தோட்டத்தில் அல்லது தோப்பிலே செடிகளை நட்டு தண்ணீர் ஊற்றிக்கொண்டேயிருப்போம். துளிர்விட ஆரம்பிக்கும் போது நட்டவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுகிறது. இதில் ஜீவன் இருக்கிறது. இது வளர்ந்து பலன் தரும் என்கிற நம்பிக்கை, ஒரு வீட்டிலே குழந்தை பிறக்கும்போது ஒரு புது நம்பிக்கை 'A New Hope' பெற்றோருக்கும், குடும்பத்தினருக்கும் ஏற்படுகிறதைக் காண்கிறோம். உலகத்திலே பிறக்கிற பிறக்கப்போகிற ஒவ்வொரு குழந்தைக்கும் பின்னணியத்திலே இறைவனுடைய ஒரு தூரக் காட்சி, ஒரு செயல்பாடு இருப்பதை நாம் மறந்துவிடலாகாது. நம்முடைய நாடு குழந்தைகளுக்கு கல்வி திட்டத்தை வகுத்து எல்லா குழந்தைகளும் கல்வி கற்க வேண்டும், இலவசமாக கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று செயல்பட்டு வருகிறது. நம்முடைய அரசு சிறு குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதன் மூலம், அவர் வாழ்க்கையைக் கெடுப்பதை விரும்பாமல் சிறுவர்களுக்கு கல்வியளிக்கவேண்டுமென்று விரும்புகிறது. நம்முடைய நாட்டிலே குழந்தை பிறப்பு விகிதாசாரம் அதிகமாய் இருப்பதால், குழந்தைகளின் நலன் பாதிக்கப்படுவதைக் கண்டு, அளவோடு பெற்று வளமோடு வாழ்கிற குடும்பங்களை உருவாக்க குடும்பநல திட்டத்தை அமுல்படுத்தி வருகிறது. இதற்காக உலகளாவிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதையும் நாம் அறிவோம்.

இன்று நாம் சமூகத்திலே பார்க்கும்போது பிள்ளைகளில் வேறுபாடு பார்க்கப்படுவதைக் காண்கிறோம். ஆண்பிள்ளைகளென்றால் வளர்த்துவிடு; பெண்பிள்ளைகளென்றால் ஒழித்துவிடு என்கிற மனநிலையை பார்க்கிறோம். இது பெரிய பாவம். எல்லா குழந்தைகளும், ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் இறைவனுடைய திருச்சாயலிலே உருவாக்கப்பட்டு மனித சமுதாயத்திற்கு வழங்கப்படுகின்றனர். ஒவ்வொரு பிள்ளையின் உயிரும் இறைவனது ஜீவசுவாசம். ஆகையினாலே பிள்ளைகளிடத்திலே ஆண், பெண் வேறுபாடு காட்டக்கூடாது. இன்னும் பார்க்கும்போது செல்வந்தர் வீடுகளிலே, வசதி படைத்த வீடுகளிலே குழந்தைகள் சொகுசாக வாழ்கின்றார்கள் ஏழை எளிய வீடுகளிலே வாழும் பிள்ளைகளின் வாழ்க்கை மிகப் பரிதாபமாக இருக்கிறது. ஆனால் எல்லா குழந்தைகளைக் குறித்தும் இறைவனுக்கு ஒரு நோக்கம் உண்டு.

ஆபிரகாமுக்கு இறைவன்மீது அளவில்லாத நம்பிக்கை உண்டு. அவன் இறைவன் சொல்வதை அப்படியே கேட்கிறவன். ஆதி. 16-ஆம் அதிகாரத்திலே "ஆண்டவரே என் வீட்டில் பிறந்த இன்னொரு பிள்ளையல்லவா எனக்குப் புத்திர சுவிகாரனாய்மாறப் போகிறான்" என்று சொன்னபோது, ஆண்டவர் சொன்னார், உனக்கு ஒரு குழந்தையைத் தருவேன் அவன் உனக்குப் பின்னர் சந்ததியின் தலைவனாக விளங்குவான். வெளியே வா, வானத்தைப் பார் எவ்வளவு நட்சத்திரங்கள்? உன்னால் எண்ண முடியுமா? கடற்கரை மணலைப் பார் உன்னால் எண்ண முடியுமா? அதுபோல உனக்குத் திரளான மக்களைத் தருவேன்" என்று சொன்னார். அது போல் நம் திருச்சபையில் இருக்கும் ஒவ்வொரு குழந்தையும் கூட வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள்.

நியாயாதிபதிகளின் புஸ்தகத்திலே மனோவாவின் குடும்பத்தைப் பார்க்கிறோம். ஆண்டவர் மனோவாவின் மனைவியிடம் இந்த இஸ்ரவேல் மக்கள் கஷ்டப்படுகின்றார்கள். இவர்களுக்கு விடுதலை கொடுக்க வேண்டும். இந்த விடுதலையைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு தலைவன் தேவை ஆகையினாலே உனக்கு ஒரு பிள்ளையைத் தர இருக்கின்றேன். இவன் மூலமாக ஒரு பெரிய இரட்சிப்பை இஸ்ரவேல் மக்கள் பெறுவார்கள். அவன் இஸ்ரவேலை மீட்டு இரட்சிப்பான் என்றார்.

இன்னும் பார்க்கும் போது சகரியா - எலிசபெத் இருவருக்கும் பிள்ளையில்லை. ரொம்ப காலமாகி விட்டது; வயதாகி விட்டது. ஆண்டவர் சகரியாவிடம், உனக்கு ஒரு பிள்ளையைத் தருவேன், அவன் கிறிஸ்துவுக்கு முன்பாக வழியை ஆயத்தம் பண்ணுவான் இறைவனுடைய அரசை ஸ்தாபிப்பதற்கு இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக அவன் வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தமாகவும், முன் தூதனாகவும் இருப்பான் என்று கூறினார் அவ்வாறே யோவான் ஸ்நாபகனை கொடுத்தார்.

மரியாள் தன் வீட்டிலிருக்கும் போது தூதன் வந்து "கிருபை பெற்றவளே வாழ்க! நீ ஒரு குழந்தையைப் பெறுவாய், தேவாதி தேவனைப் பெறப் போகிறாய், உலக இரட்சகரைப் பெறப் போகிறாய்" என்று சொல்லி வாழ்த்தினான். ஆகையினாலே குழந்தைகள், கடவுள் வாக்குத்தத்ததை நிறைவேற்றும் வகையில் நமக்குத் தரும் ஈவுகள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

குழந்தை வளர்ப்பு மிக முக்கியமான பொறுப்பாகும். குழந்தை சிறு பருவத்திலேயே சிரிக்கிறது, சத்தத்தைக் கேட்ட மாத்திரத்திலே கவனிக்கிறது, தொட்ட மாத்திரத்திலே துடிக்கிறது. இளமைப் பருவம் என்பது துடிப்பான பருவம். இளமைப் பருவத்திலே குழந்தையைக் கவனமாக வளர்ப்பது பொற்றோரின் கடமை.

பெரும்பாலும் நம் தோட்டத்தில் நல்ல செடிகளையும் பூக்களையும், படர்ந்து வளரும் கொடிகளையும் நாம் நட்டு. தண்ணீர் பாய்ச்சி அதை நல்லபடி படர்த்தி வளர செய்வதுண்டு. காற்றடித்தாலும், மழை பெய்தாலும் கீழே விழாதவாறு பார்த்து கொள்வதுண்டு. அவற்றில் அழகிய பூக்களைக் காணலாம். எந்த கால நிலையானாலும் அவை பலன்தர தவறுவதில்லை. அணில் போன்ற சிறிய பிராணிகள் வந்து அவற்றின் கனிகளைச் சாப்பிடுவதைப் பார்க்கலாம் சிட்டு குருவி போன்றவைகள் கூடு கட்டி வாழ்வதைப் பார்க்கலாம். நல்ல நிழல் தருகின்றது. இது எதனால்? செடியை ஒரு பருவத்திலே எடுத்து நட்டு வளர்த்தி இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறதினாலே இன்று அழகிய பூக்களை, அழகிய காட்சிகளைப் பார்க்க முடிகிறது பிள்ளைகளையும் இப்படி வளர்க்க வேண்டும். பிள்ளைகளுடைய வருங்காலம் இன்னதென்று உணர்ந்து சிறு பருவத்திலே பிள்ளைகள் நல்லதைப் பார்ப்பதற்கும். இனிமையானவற்றைக் கேட்பதற்கும், நல்ல உணர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் ஏற்ற முறையிலே குழந்தைகளை வளர்க்க வேண்டும். இது பெற்றோர்களின் கடமை.

சிம்சோன் - மனோவா பெற்ற குழந்தை அவன் எப்படிப்பட்டவன்? நசரேயன். நல்ல பெலன் உடையவன். இப்படிப்பட்டவன் எப்படிப்பட்ட நிலையை அடைந்தான்? தவறிப் போனதால் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டான். படுக்கக் கூடாத இடத்திலே தலை வைத்துப் படுத்தான். அதனால் அந்தப் பெரிய பலசாலி கண்கள் பிடுங்கப்பட்டு, குரங்கைப்போல மற்றவர்களுக்கு வேடிக்கை காட்டும்படி வைக்கப்பட்டு, அந்த பெரிய கூட்டத்திலே அவனும் மடிந்து போனதைப் பார்க்கிறோம். இன்று ஆயிரக்கணக்கான வாலிபர்கள் கெட்டுப்போக காரணமென்ன? பலசாலியாக இருக்கலாம், தைரியசாலியாக இருக்கலாம். ஒன்றாம் சங்கீதத்திலே சங்கீதக்காரன் சொல்லுகிற “துன்மார்க்கருடைய ஆலோசனையிலே நடவாமல், பாவிகளுடைய வழியிலே நில்லாமல், பரியாசக்காரன் உட்காரும் இடத்திலே உட்காராமல்” என்னும் இந்த மூன்று பிரமாணங்களையும் கடைப்பிடித்தார்கள் என்றால் அவர்கள் தேவதூதர்களைப் போல காணப்படுவார்கள்.

சகரியாவும் எலிசபெத்தும் தங்கள் பிள்ளையை வளர்த்தனர் அவன் கிறிஸ்துவுக்கு முன்பு எழும்புவதைப் பார்க்கிறோம். அரசு மாளிகையிலே எழுந்த அவல நிலையைக் கண்டித்தான். மக்கள் திரளாக அவனிடம் இழுக்கப்பட்டு வந்தார்கள். உம்முடைய பாத ரட்சையின் வாரை குனிந்து அவிழ்ப்பதற்குக்கூட நான் தகுதியற்றவனென்று தன்னைத் தாழ்த்தினான். இன்று உலக வரலாற்றிலே யோவான் ஸ்நாபகன் இறைவனுக்கு முன் தூதனாக இடம் பெற்றுவிட்டான்.

இயேசு கிறிஸ்துவும் ஒரு குழந்தையாகப் பிறந்தார். “ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை மாம்சமானது மாம்சமாகி கிருபையும் சத்தியமும் நிறைந்தவராக நமக்குள்ளே வாசம் பண்ணினார் .” ஆகையினாலே உலகிலுள்ள அத்தனை மக்களுக்கும் இறைவன் இயேசு கிறிஸ்துதான் மாதிரி. அவர் என்னச் செய்தார்? குழந்தைகளைத் தூக்கி அணைத்து ஆசீர்வதித்தார். இறைவன் உங்கள் குழந்தைகளையும் ஆசீர்வதிப்பாராக! இறையருள் உங்களனைவரோடும் கூட இருப்பதாக! ஆமென்.

பேராயரின் அருளுரைகள்


**Rtd. Rt. Rev. G. Christdhas**

**Bishop, C.S.I. K.K. Diocese**

## சிறுவர் பகுதி

### பசுவும் பன்றியும்

பசு ஒன்றும் ஒரு பன்றியும் வாக்கிங் சென்றன. வழியில் ஒரு சூப்பர் மார்க்கெட்டுக்குள் நுழைந்தன. உள்ளே நடந்து சென்றபோது பசு கத்தியது: “அங்கே பார் நண்பனே – பால், பால் பவுடர், மோர், தயிர், பால்கட்டி, கறி, வெண்ணெய், நெய் இவை யாவும் என்னுடைய ஈவுகள்.” பன்றியை குறைவெண்ணம் மேற்கொண்டது. கொஞ்சநேரம் கழித்து பன்றி கத்தியது. “பார், பார், பார் என்னுடைய ஈவைப் பார் - பன்றிக்கறி”



இருவரும் தொடர்ந்து நடந்தனர். பன்றி சோகமாகக் கூறியது. “நீயும் கொடுக்கிறாய், நானும் கொடுக்கிறேன். ஆனால் மக் கள் என்னையல்ல உன்னைத்தான் நேசிக்கிறார்கள். சீ, பன்றி என்று பிள்ளைகளைத் திட்டுகிறார்கள், ஏன்?” பசு சிறிது நேரம் ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு பிரகாசமான முகத்துடன் சிரித்துக் கொண்டே சொல்லியது. “நான் தாராளமாய், கிரமமாய், தன்னிச்சையாய், நானாகவே சந்தோஷமாகக் கொடுக்கிறேன். பன்றியே, உன்னைத் துரத்திப் பிடித்து அடித்துக் கொன்றாலேயொழிய கொடுக்கமாட்டாயே”

கடவுளுக்கு நாம் மகிழ்வோடு, கிரமமாக, மனமாற அள்ளிக் கொடுக்கவேண்டும், கஷ்டம் வரும்போது மட்டுமல்ல.

## தீமைக்கு நன்மை....




மண்ணில் : 387
விண்ணில் : 17.03.493
நாடு : ஸ்காட்லாந்து
தரிசன பூமி : அயர்லாந்து

வயது 17, தெருவில் நின்று கொண்டிருந்தார் பேட்ரிக். திடீரென வந்தது ஒரு முரட்டுக் கூட்டம். அவர்கள் கையில் சிக்கி கொண்ட இவர் அயர்லாந்து நாட்டிற்குக் கடத்தப்பட்டார். அங்கே ஒரு தலைவனிடம் ஒப்படைக்கப்படவே, ஆடு மேய்க்கும் தொழிலுக்கு உட்படுத்தப்பட்டார். ஆண்டுகள் ஆறு கடந்தன.

ஒருநாள், அவ்விடத்திலிருந்து தப்பித்துத் தன் தாயகமான பிரிட்டனுக்கு ஓடி வந்தார். எனினும், தான் அடிமையாக இருந்த அயர்லாந்து நாட்டினரை கிறிஸ்துவுக்குள் கொண்டுவர வேண்டும் என்ற ஆவல் இவரை உந்தித் தள்ளியது. அதற்கான நேரத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

வயது 43, இவரின் கனவு நனவானது. அயர்லாந்து சென்றார் பேட்ரிக். ஆயராகச் சென்ற அவரை முதலில் மக்கள் விரட்டியடித்தனர். எனினும், ‘டிச்சூ’ என்ற பெயர்கொண்ட நாட்டுத் தலைவனை மனமாற்றம் அடையச் செய்தார். அத்தலைவன் திருமுழுக்குப் பெற்றதால் அங்கு ஒரு ஆலயத்தைக் கட்டினார். ஆயினும், பல உபத்திரவங்கள் அம்மக்களால் இவருக்கு கொடுக்கப்பட்டது. பல பேய் வித்தைகளால் இவரை மிரட்டினர். ஆனால், அவரது ஜெபத்தின் வல்லமையினால் ‘ட்ருயிட்’ என்ற இடத்தின் குருக்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

7 ஆண்டுகள் ‘கன்நாட்’ பகுதியில், கிறிஸ்துவின் ஒளிகொடுக்கும் சுடராகத் தன்னைப் பிரதிபலித்தார். இவரின் விசுவாச வாழ்க்கையினால் பலர் கவரப்பட்டு கிறிஸ்துவின் மந்தையில் சேர்ந்தனர். இருப்பினும், விரோதிகள் பலரால் பலமுறை சிறைக்குள் தள்ளப்பட்டார். இவர் உயிருக்குப் பலமுறை ஆபத்துக்கள் நேர்ந்தது. எல்லாத் துன்பங்களின் மத்தியிலும் ஆண்டவரையே சார்ந்திருந்ததால் வெற்றிகளைப் பெற்றார். ஜெயமோ கர்த்தரால் வரும் என்ற வாக்கு இவர் வாழ்வில் பலித்தது. ஆயிரக்கணக்கானோர், அங்கே திருமுழுக்குப் பெற்றனர். அயர்லாந்தில் பல இடங்களில் திருச்சபைகள் உருவாக்கப்பட்டன. இவரது அயராத

உழைப்பினால் **'அயர்லாந்தின் அப்போஸ்தலன்'** என்று இவர் அழைக்கப்பட்டார்.

அன்பரே! உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களும் இரட்சிக்கப்பட முயற்சி செய்கிறீர்களா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு**:- தான் சிலுவையில் அறையப்பட தயாராயிருந்தாலன்றி எந்த திருச்சபையோ அல்லது இயக்கமோ நீடித்து வாழ முடியாது. - **வின்செஸ்டர்**

## பிள்ளைகளும் நற்குணங்களும்

### 1. பிள்ளைகள் கற்றுக்கொள்ளும் வழிமுறைகள்:-

கற்றல் என்பது இயற்கையாகவே குழந்தைகளிடம் அமைந்திருக்கும் குணம். குழந்தைகளுக்குக் கல்வியைக் கொடுப்பது பெற்றோரின் கடமை. முறையானதும், உண்மையானதுமான கல்வியைத் தம் பிள்ளைகளுக்குத் தேர்ந்தெடுப்பது பெற்றோரின் அறிவு மற்றும் அனுபவ வளர்ச்சியைப் பொறுத்திருக்கிறது.




பவுலடியார் பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் சேர்த்து ஒரு வழிகாட்டுதலைக் குறிப்பிட்டிருக்கின்றார். (எபே 6:1-14). பெற்றோர் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் ஆண்டவருக்கேற்ற நடத்தையிலும், போதனையிலும் வளர்க்க பழக்க வேண்டும் அல்லது பயிற்றுவிக்க வேண்டும். பிள்ளைகளும் பெற்றோருக்குக் கீழ்படிந்து இறைவனிடமிருந்து வரும் நன்மையைப் பெற்று நீடிய ஆயுள் நாட்களுடன் வாழவேண்டும் எனப் போதிக்கின்றார். அவர்களுக்கு எது கொடுக்கப்படுகிறதோ அதை அவர்கள் கற்றுக்கொள்கின்றனர். நல்ல குணங்களைக் கற்பித்தால் நல்லவராக வாழ்வார்கள் தீயவற்றைக் கற்பித்தால் தீயவர்களாவார்கள். எதைக் கற்பிக்கிறோமோ அது அவர்களுக்குள் நிலைத்திருக்கிறது.

ஏசாயா தீர்க்கன், தான் கற்றுக் கொண்ட படியே சொல்லுகையில் "எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையில் உம்மைத் தேடுகிறேன்" (ஏசாயா 26:6). அதிகாலையில் குழந்தைகள் இறைவனைத் தேட நாம் கற்றுக் கொடுக்க வேண்டும். பவுலடியார் தீத்துக்கு

எழுதுகையில் “நம்முடையவர்கள் கனியற்றவர்களாயிராதபடிக்கு குறைவுகளை நீக்குவதற்கேதுவாக நற்கிரியைகளைச் செய்யப் பழகட்டும்” (தீத்து 3:14) எனக் கூறுகிறார். மேலும் அவர் மனிதர்கள் யாவருக்கும் எந்த நிலையிலும் மனநிறைவோடிருக்க கற்றுக்கொண்டதாகக் கூறுகிறார் (பிலி. 4:11). இவை எல்லாவற்றிற்கும் காரணமாகிய இயேசு கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு தன் பூரண அன்பின் கீழ்த் தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்பை வழங்குகிறார். ஆகவே குழந்தைகளுக்கு மேன்மையானதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். குழந்தைகளும் மேன்மையானதைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

## 2. பிள்ளைகள் இயேசுவிடம் வரும் வழிமரபினர்:-

**“அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்”** குழந்தைகள் இயேசுவண்டை வாழும் சந்ததி. பெற்றோருக்கு இயேசு கொடுத்த உத்தரவு என்னவென்றால் பிள்ளைகள் இயேசுவிடம் வர தடை செய்யாதிருங்கள் என்பதாகும். சிறுபிள்ளைகள் இயேசுவிடம் கூடிவர தடை செய்கிறவர்களைக் கண்டு இயேசு கோபம் கொள்கிறார் (மாற்கு 10:13). சீடர்கள் சிறுபிள்ளைகளைக் கொண்டு வந்தவர்களைத் தடுக்கிறார்கள். இயேசு அவர்களுக்கு இடம் கொடுங்கள். அவர்களைத் தடைச் செய்யாதிருங்கள் என ஆலோசனை வழங்குகிறார். குழந்தைகளுக்கு உதவி செய்து இயேசுவோடு சேர்ந்து வாழும் அற்புத அனுபவங்களை அவர்கள் பெற நல் வழிகாட்டுவோம்.

பெரியவர்களைப் பார்த்து இயேசு குழந்தைகளின் குணங்களாகிய களங்கமின்மையைக் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது அவர்கள் பரலோக ராஜ்யத்தில் சென்றடைய முடியும் எனத் திட்டவட்டமாகக் கூறுகிறார்.

## 3. பிள்ளைகள் தரிசனங்களைக் காணும் வழிமரபினர்:-

“அப்பொழுது சாமுவேல் ஒன்றையும் அவனுக்கு மறைக்காமல் அந்த காரியங்களையெல்லாம் அவனுக்கு அறிவித்தான். கர்த்தர் ஏலியின் சந்ததியை முற்றிலும் அழித்து விட்டு ஒரு புதிய சந்ததியைச் சாமுவேல் வழியாக ஏற்படுத்தச் சித்தமானார். சிறுவன் சாமுவேலுக்கு இறைவன் கொடுத்த தரிசனம் (1சாமு. 3:1-2) இன்றைய குழந்தைகளுக்கு ஒரு மாதிரியாக அமைவது அவசியம். தம் குழந்தைகள் மூலமாக கடவுளின் சந்ததி உருவாக்கப்பட்டு இறையாட்சியை நிலை நிறுத்துவது அவசியம். குழந்தைகளுக்குத் தரிசனங்களும் தூரக்காட்சிகளும் உண்டாக அவர்களைக் கிறிஸ்துவின் பாதையில் வழி நடத்துவது பெற்றோரின்

கடமையாகும். பிள்ளையானவனை நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து. முதிர் வயதிலும் அவன் அதை விடாதிருப்பான். கடவுள் அவர்களை அழைத்து எதிர்காலத் தரிசனத்தையும் அவரது திட்டத்தையும் அறிவிக்க ஆயத்தமாய் இருக்கிறார். எப்பொழுது குழந்தைகள் கடவுளின் அருகில் வருகின்றார்களோ அப்பொழுது அவர்களின் எதிர்கால தரிசனங்களும் காட்சிகளும் சுத்தமானதாகவும், நேர்மையானதாகவும் அமையும்.

அன்னாள் தன் குமாரனைத் தகுந்த இடத்தில் கொண்டு சேர்த்தாள். அங்கே அவளுக்குத் தகுந்த கல்வி, அறிவு, ஆற்றல், பயிற்சி, தரிசனம், வழிகாட்டுதல் ஆகியவை கிடைக்கும் என நம்பினாள். நாமும் நம் பிள்ளைகளை தகுந்த இடங்களில் அதாவது திருமறைப்பள்ளி போன்ற இடங்களில் அனுப்பி அவர்கள் சிறந்த வழிகாட்டுதலைப் பெற்று வாழவும் தங்கள் நடக்கைகளை கவமனாய் அமைத்துக் கொண்டு, எச்சரிக்கப்பட வேண்டிய இடங்களில் எச்சரிக்கப்பட்டு கடவுளின் கரத்தின் வல்லமையுள்ள கருவியாகச் செயல்பட உதவிடுவோம்.

**- V.G. மஹிழா ஜெங்கின்ராஜ்**

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ நவம்பர் 2021

| | | |
|---|---|---|
| 05-11-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Aspin Bejo |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Nethaji Jacob Durai |
| 12-11-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Britny Jenkinraj |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Pratheesh |
| 19-11-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Binita Pratheesh |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Praveen |
| 26-11-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Divya Darling Kasiraja |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Robert Dhas |
| 03-12-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Felsi John |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. V. N. Rajan |

# பெண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 102

## நவம்பர் 2021 மாத கேள்விகள்

### (ரோமர் 9 முதல் 15 முடிய)

1. எது பாவம்?
2. சீயோனில் வைக்கிறேன் என்று கூறப்பட்டவை?
3. மிகவும் பிரயாசப்பட்டவள் யார்?
4. காட்டொலிவமரம் என குறிப்பிடுவது யாரை?
5. கற்பனைகளைக் குறித்து கூறப்பட்டுள்ள அதிகாரம், வசனம் எழுதுக?
6. எவன் மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் உருக்கமாயிருப்பேன் என்று யாரிடம் கூறப்பட்டது?
7. கிறிஸ்துவின் சுவிசேஷம் எதுவரைக்கும் பூரணமாய் பிரசங்கிக்கப்பட்டது?
8. தேவ நீதிக்கு கீழ்ப்படியாதவர்கள் யார்?
9. ஜாக்கிரதையாய் இருக்கவேண்டியது யார்?
10. எது தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறது?
11. குறித்த காலத்தில் குமாரனை பெறுவது யார்?
12. கர்த்தருக்குட்பட்டவர்கள் யார்?
13. எதில் முந்திக்கொள்ளவேண்டும்?
14. எது தேவனுடைய ராஜ்யம் அல்ல?
15. ஆபிரகாமின் சந்ததியும் பென்யமீன் கோத்திரத்தானுமாகிய நான் யார்?
16. அதிக சமீபமாயிருப்பது எது?
17. கேள்வி எவ்வாறு வரும்?
18. பாகாலுக்கு முன்பாக முழங்கால்படியிடாதவர் எத்தனை பேர்?
19. நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருப்பது எது?
20. யாரிடம் சமாதானமாயிருங்கள் என பவுல் கூறுகிறார்?

## அக்டோபர் 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. மீறுதலின் பலன் - ரோமர் 5:15
2. ஆவியின் சிந்தை – ரோமர் 8:6
3. நித்திய ஜீவன் - ரோமர் 6:23
4. தேவனிடத்தில் - ரோமர் 2:11
5. கற்பனை – ரோமர் 7:12
6. நியாயப்பிரமாணம் - ரோமர் 4:15
7. ஆக்கினைத்தீர்ப்பு – ரோமர் 8:1
8. நித்திய வல்லமை, தேவத்துவம் - ரோமர் 1:20
9. ஆதாம் - ரோமர் 5:14
10. நியாயப்பிரமாணம் - ரோமர் 7:8
11. ஆபிரகாம் - ரோமர் 4:2
12. மாம்ச சிந்தை – ரோமர் 8:7
13. பிதாவின் - ரோமர் 6:4
14. தேவ அன்பு – ரோமர் 5:5
15. உக்கிர கோபாக்கினை – ரோமர் 2:8
16. ஆவியானவர் - ரோமர் 8:26
17. கிருபை – ரோமர் 5:20
18. நன்மை – ரோமர் 7:19
19. விசுவாசம் - ரோமர் 4:14
20. பரிசுத்தமாகுதல் - ரோமர் 6:22

## அக்டோபர் மாத போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Manju Martin |
| Mrs. Aspin Bejo | Mrs. Percy Jean |
| Mrs. Boopathi Baskar | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Evangelin Yesudhas | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Jenshy N. Lenin | |

## நவம்பர் 2021 மாத கேள்விகள்

## (எரேமியா 15 முதல் 23 முடிய)

1. கடற்கரை மணலைப்போல உண்டாயிருப்பது யார்?
2. யூதாவை யார் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்கிறார்?
3. ஜனங்கள் கர்த்தரை மறந்து யாருக்கு தூபம் காட்டுகிறார்கள்?
4. நீதி நியாயத்தையும் எங்கு நடப்பிப்பார்?
5. கர்த்தருடைய வார்த்தை எப்படிப்பட்டது?
6. யோயாக்கீம் எவ்வாறு புதைக்கப்படுவான்?
7. புதைப்பதற்கு இடமில்லாமல் சவங்களை எங்கே புதைப்பார்கள்?
8. பலிபீடத்தின் கொம்புகளில் பதிந்திருப்பது எது?
9. கர்த்தரை விட்டு அகன்றுபோகிறவர்களின் பெயர் எதில் எழுதப்படும்?
10. களிமண் குயவன் கையில் இருப்பதுபோல கர்த்தர் கையில் இருப்பது யார்?
11. யோயாக்கீமின் குமாரன் யார்?
12. கிழக்கு வாசலுக்கு எதிரான பள்ளத்தாக்கு எது?
13. யாருக்கு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவார்?
14. உயர்ந்த மகிமையுள்ள சிங்காசனமாய் இருப்பது எது?
15. எதைத் தீக்கொளுத்துவேன் என கர்த்தர் சொல்லுகிறார்?
16. யாருடைய கைக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன் என கர்த்தர் சொல்லுகிறார்?
17. யூதாவின் அழிவுக்கு ஆண்டவர் அனுப்பிய வாதைகள்?
18. அநியாயமாய் ஐசுவரியத்தை சம்பாதிக்கிறவன் எதற்கு சமமாய் இருக்கிறான்?
19. தீர்க்கதரிசிகளுக்கு எதை புசிக்கக் கொடுப்பேன் என கர்த்தர் சொல்லுகிறார்?
20. கெடுத்து சிதறடிக்கிற யாருக்கு ஐயோ?

## அக்டோபர் 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. கிலேயாத் - எரேமியா 8:22
2. எகிப்து – எரேமியா 11:4
3. சீயோன் - எரேமியா 14:19
4. கர்த்தர் - எரேமியா 10:10
5. பெத்கேரேம் - எரேமியா 6:1
6. எத்தியோப்பியன் - எரேமியா 13:23
7. எருசலேம் - எரேமியா 9:11
8. சமுத்திரத்தின் மணலை – எரேமியா 5:22
9. வானராக்கினிக்கு – எரேமியா 7:18
10. ஐப்பிராத்து நதி ஓரத்தில் - எரேமியா 13:5
11. நாவு – எரேமியா 9:8
12. புடமிடுகிறவனுடைய – எரேமியா 6:29
13. பண்டகச்சாலை – எரேமியா 10:13
14. சங்காரப் பள்ளதாக்கு – எரேமியா 7:32
15. சேனைகளின் கர்த்தர் - எரேமியா 11:20
16. ஞானி – எரேமியா 9:23
17. எருசலேம் - எரேமியா 6:6
18. தாண் - எரேமியா 8:16
19. இஸ்ரவேல் - எரேமியா 10:16
20. சீலோவில் - எரேமியா 7:12

## அக்டோபர் மாத போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mr. Alex Baskar | Mr. Lenin Raj |
| Mr. Anu R. | Mr. Prince J. P. |
| Mr. Bejo Nelson | Mr. Ramesh R. |
| Mr. Daniel Raj P. | Mr. Robin Devadhas |
| Mr. Jean C. R. Shibin | Mr. Sujith Gladson |
| Mr. Jino John | |

May God Bless All

## Birthday Celebrants – November 2021

| | |
|---|---|
| 01st November | Mr. Justus Martin |
| 01st November | Mr. Johan Pratheep |
| 03rd November | Mrs. Dyana Angel Thangam, W/o Mr. Nethaji Jacob Durai |
| 04th November | Master. Jotham Paul Samuel, S/o Mr. Johnson |
| 05th November | Mr. Jerin |
| 06th November | Mr. T. N. Brejin |
| 07th November | Mrs. Jenelia, W/o Mr. Dhinakaran |
| 08th November | Mr. Pushpakaran |
| 09th November | Miss. Nita Jane, D/o Mr. Prem Meshach |
| 10th November | Master. Aeerick Faben, S/o Mr. Pratheesh |
| 10th November | Miss. J. Jona, D/o Mr. Jebastin |
| 13th November | Mrs. Jeyaselvi, W/o Mr. Jose Chandra Bose |
| 13th November | Miss. Fanny Santa, D/o Mr. Gnanadhas |
| 13th November | Mr. Praveen Jebasingh |
| 14th November | Mr. J. P. Prince |
| 16th November | Miss. Fiona Gen Mayshack, D/o Mr. Meshack |
| 17th November | Mr. Ansio Sajin |
| 19th November | Mrs. Sheeba, W/o Mr. Edward Sam |
| 21st November | Mr. M. George |
| 22nd November | Mrs. Pushpa Rani, W/o Mr. Moorthy |
| 24th November | Miss. Joselin Jenifer, D/o Mr. Selvamoni |
| 25th November | Mrs. Wiselin Shalisha, W/o Mr. SelvaKumar |
| 28th November | Miss. Sheryl Heidi, D/o Mr. Gnana Ruban |
| 30th November | Miss. Jovita, D/o Mr. Victor Thayasingh |

# Wedding Day Anniversaries – November 2021

| | |
|---|---|
| 07th November | Mr. Kasi Raja & Mrs. Divya Darling |
| 10th November | Mr. Jenil Singh & Mrs. Amutha |
| 11th November | Mr. George & Mrs. Latha |
| 15th November | Mr. Jino Retna Kumar & Mrs. Sujatha Shalini |
| 15th November | Mr. Livingston & Mrs. Jeny Sharlin |

## வேதம் வாசித்தால்!

**வேதப்பகுதி : உபாகமம் 6:1-9**

ஏன் தினமும் வேதம் வாசிக்கிறீர்கள் என்ற கேள்வி ஞாயிறு பள்ளியில் கேட்கப்பட்டது.




- சித்ரா என் பெற்றோர்கள் சொன்னதால் வேதம் வாசிக்கின்றேன் என்றாள்.
- தேவ பக்தியுள்ளவர்கள் அவ்விதம் செய்யவேண்டும் என்பதால் வேதம் வாசிக்கின்றேன் என்றாள் பிங்கி.
- வேதம் வாசிப்பதால் கர்த்தருடைய வழிகளையும் அவருடைய ஆலோசனைகளையும் அறிய முடியும். அவைகளின்படி வாழலாம் என்றாள் டிலைட்டா.

உன்னிடம் இந்த கேள்வி கேட்கப்பட்டிருந்தால் எப்படி சொல்லியிருப்பாய்?

நாம் சாப்பிடுவது எதற்காக? அப்பா, அம்மா சொன்னதற்காகவா? நாம் ஆரோக்கியமாக வாழ உணவு அவசியம். டிலைட்டா சொன்ன விடை சரியானது. கர்த்தருக்கு விருப்பமானது என்ன என்பதை வேதம் வாசிப்பதால் அறியலாம். அதன்படி நடந்தால் ஆசீர்வதிக்கப்படுவோம்.

**சிந்தனைக்கு:-** வேத வார்த்தைகள் உன்னுடைய ஆத்துமாவை வாழ வைக்கும் ஆவிக்குரிய உணவு. எனவே தினமும் வேதம் வாசி.

**கேள்வி:** வேதம் வாசித்தால் ஆசீர்வாதம் வருமா?

**பதில்:** வேதம் வாசித்து அதன்படி நடந்தால் ஆசீர்வாதம் வரும்.

**நினைவிற்கு:** மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல. கர்த்தருடைய வாயிலிருந்துப் புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். **(உபாகமம் - 8:3)**

**ஜெபம்:** அன்பின் தேவனே! என்னுடைய ஆத்மாவிற்கு தேவையான ஆன்மீக உணவை நான் தினமும் வேதத்தை வாசித்து அதிலிருந்து பெற்றுக்கொள்ள உதவிசெய்யும். இயேசுவின் நாமத்தில் பிதாவே! ஆமென்.

## வரவேற்கிறோம்

கடந்த மாதங்களில் நமது சபை ஐக்கியத்தில் புதிய அங்கத்தினர்களாக இணைந்த உங்களை கிறிஸ்துவின் நாமத்தில் அன்புடன் வரவேற்கிறோம்.

| Name | Native Place | Area |
|---|---|---|
| Mr. Sheffery Beaula Sam | Mangarai | Jifnain |

## ஜெபிக்க சில குறிப்புகள்

### திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, போதகர் விசாவுக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.
2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.
3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
   - ஓய்வுநாள் பள்ளி
   - பெண்கள் ஐக்கிய சங்கம்
   - ஆண்கள் ஐக்கிய சங்கம்
   - பாடகர் குழு
   - ஜெபக் குழு

   அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.

5. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.
2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.
3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.
4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.
5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.
2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.
3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.

5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு மத சார்பின்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.

2. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.

3. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.

4. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.

2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.

3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.

4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.

5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

## அனுதின மன்னா – நவம்பர் 2021

அன்பர்களே! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தினமும் திருமறை வாசிக்கும் பழக்கம் உங்களிடத்தில் இருக்கிறதா? இல்லையேல் இன்றே வாசிக்க தீர்மானம் எடுங்கள். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அவரது வார்த்தையினால் போஷித்து உங்களை ஆசீர்வதிப்பாராக. திருமறைப்பகுதியை வாசித்து குடும்ப ஜெபத்தில் தனி ஜெபத்தில் தியானித்து ஓராண்டில் பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| நவம்பர் 1 | திங்கள் | எபேசியர் 3:14-21 | எபேசி.3:14,15 | யோவா. 10-11 |
| நவம்பர் 2 | செவ்வாய் | உபா. 12:1-7 | உபா. 12:7 | யோவா. 12-13 |
| நவம்பர் 3 | புதன் | எண். 33:50-56 | எண்.33:54(b) | யோவா. 14-15 |
| நவம்பர் 4 | வியாழன் | 1சாமு. 20:1-17 | 1சாமு. 20:16 | யோவா. 16-17 |
| **நவம்பர் 5** | **வெள்ளி** | **யோசு. 21:41-45** | **யோசு. 21:45** | **யோவா. 18-19** |
| நவம்பர் 6 | சனி | 2சாமு. 22:32-44 | 2சாமு. 22:33 | யோவா. 20-21 |
| நவம்பர் 7 | ஞாயிறு | சகரியா 9:11-17 | சகரியா 9:12 | அப். 1-2 |
| நவம்பர் 8 | திங்கள் | சங்கீதம் 28:1-9 | சங். 28: 7 | அப். 3-4 |
| நவம்பர் 9 | செவ்வாய் | சங்கீதம் 91:1-16 | சங். 91:4 | அப். 56 |
| நவம்பர் 10 | புதன் | சங்கீதம் 31:1-11 | சங். 31:3 | அப். 7-8 |
| நவம்பர் 11 | வியாழன் | சங்கீதம் 81:1-16 | சங். 81:16 | அப். 9-12 |
| **நவம்பர் 12** | **வெள்ளி** | **உபா. 33:17-29** | **உபா.33:27(a)** | **அப். 13-15** |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| நவம்பர் 13 | சனி | நீதி. 14:16-27 | நீதி. 14:26 | அப். 16-17 |
| நவம்பர் 14 | ஞாயிறு | ஏசாயா 49:8-16 | ஏசா. 49:15 | அப். 18-19 |
| நவம்பர் 15 | திங்கள் | எரே. 31:1-7 | எரே. 31:3(b) | அப். 20-23 |
| நவம்பர் 16 | செவ்வாய் | யாத். 33:12:23 | யாத்.33:17(b) | அப். 24-26 |
| நவம்பர் 17 | புதன் | சங்கீதம் 32:1-10 | சங். 32:10(b) | அப். 27-28 |
| நவம்பர் 18 | வியாழன் | யோவா. 16:20-33 | யோவா.16:33 | ரோமர் 1-3 |
| **நவம்பர் 19** | **வெள்ளி** | **வெளி 3:14-22** | **வெளி 3:20** | **ரோமர் 4-7** |
| நவம்பர் 20 | சனி | சங்கீதம் 34:1-10 | சங். 34:10 | ரோமர் 8-10 |
| நவம்பர் 21 | ஞாயிறு | 1கொரி. 13:1-13 | 1கொரி.13:10 | ரோமர் 11-13 |
| நவம்பர் 22 | திங்கள் | ஆதி. 28:10-32 | ஆதி. 28:15 | ரோமர் 14-16 |
| நவம்பர் 23 | செவ்வாய் | சங்கீதம் 27:1-14 | சங். 27:5 | 1கொரி. 1-3 |
| நவம்பர் 24 | புதன் | 1பேதுரு 2:1-10 | 1பேதுரு 2:3 | 1கொரி. 4-6 |
| நவம்பர் 25 | வியாழன் | பிலிப். 4:1-13 | பிலிப். 4:6 | 1கொரி. 7-9 |
| **நவம்பர் 26** | **வெள்ளி** | **ஏசாயா 30:19-26** | **ஏசாயா 30:23** | **1கொரி. 10-12** |
| நவம்பர் 27 | சனி | ஏசாயா 54:1-17 | ஏசா. 54:17 | 1கொரி. 13-14 |
| நவம்பர் 28 | ஞாயிறு | உபா. 28:1-13 | உபா. 28:7 | 1கொரி. 15-16 |
| நவம்பர் 29 | திங்கள் | பிலிப். 4:1-9 | பிலிப். 4:7 | 2கொரி. 1-3 |
| நவம்பர் 30 | செவ்வாய் | யோவான் 8:31-41 | யோவா. 8:36 | 2கொரி. 4-6 |
| டிசம்பர் 1 | புதன் | எசே. 34:24-31 | எசே. 34:26 | 2கொரி. 7-9 |
| டிசம்பர் 2 | வியாழன் | 1நாளா. 17:16-27 | 1நாளா. 17:27 | 2கொரி. 10-11 |
| டிசம்பர் 3 | **வெள்ளி** | 2கொரி. 12:1-10 | 2கொரி.12:9(a) | 2கொரி. 12-13 |

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).**

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**